## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.126/2016

2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 07 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.5 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 07.01.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாராயணசாமி | ஜாதி | : | |
| த/பெயர் | : | திருமேனி | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா. 5 முன்னிலை 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) 1ம் வாதியின் கணவரும் 2, 3 வாதிகளின் தகப்பானருமான கிருஷ்ணமூர்த்திக்கு பிரேம்குமார் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். பிரேம்குமாரின் தாயாரை வீட்டில் வைத்து திருமணம் செய்துக்கொண்டார் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு 1ம் வாதி கண்ணம்மாள் என்பவரை கிருஷ்ணமூர்த்தி பதிவு திருமணம் செய்துக்கொண்டார் என்றால் சரிதான். கடந்த 1960 ஆம் வருடம் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. சேவுவன்னியர் எனது தாத்தா ஆவார். கிருஷ்ணமூர்த்திக்கும் சேவு வன்னியர் தாத்தா ஆவார். கிருஷ்ணமூர்த்தி எனக்கு பங்காளி உறவுமுறையை தவிர அவருடைய குடும்பத்திலுள்ள உறவுமுறை குறித்து எனக்கு தெரியாது.

2) எந்த ஆவணத்தில் எத்தனையாவது பக்கத்தில் அலமேலு அம்மாள் குறித்து நிபந்தனை தெரிவிக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.16 ஆவணத்தின் 6 வது பக்கத்தில் உயிருள்ள காலம் வரை அனுபவித்து கொள்ளலாம் என்றும், அதற்கு பின்னிட்டு அலமேலு அம்மாள் வாரிசுகளுக்கு சென்றடையும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அலமேலு அம்மாளுக்கு முன்பு கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

கிருஷ்ணமூர்த்தி சட்டப்படியான வாரிசுதாரர் அலமேலு அம்மாள் என்றால் சரிதான். அலமேலு அம்மாளின் வாரிசு கிருஷ்ணமூர்த்தி என்றால் சரிதான்.

3) செல்வம் என்பவர் திருமணம் செய்துக்கொள்ளலாமல் இறந்துவிட்டதால் அவரது வாரிசாக அலமேலு அம்மாள் வருகிறார் என்றால் சரிதான். அலமேலு அம்மாள் ஏற்படுத்திக்கொடுத்த ஆவணங்கள் அனைத்தும் கிருஷ்ணமூர்த்தி வாரிசுகள் மற்றும் செல்வத்தின் வாரிசுகள் என்ற அடிப்படையில் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அலமேலு அம்மாள் ஏற்படுத்திக்கொடுத்த எந்த ஆவணத்திலும் 1960 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் என்று குறிப்பிட்டு ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். உயில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாதத்திற்கு பிறகு தான் அலமேலு அம்மாள் இறந்தார் என்றால் சரிதான்.

4) சார்பதிவாளர் அலுவலகத்தில் உயில் ஆவணம் ஏற்படுத்த வேண்டும் என்றால் உயில் எழுதகூடிய நபர் நேரிடையாக சென்று கையொப்பம் மற்றும் கையெழுத்து செய்யவேண்டும் என்றால் சரிதான். அதேபோல் தான் அலமேலு சார்பதிவாளர் அலுவலகம் சென்று உயில் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி உயில் ஆவணத்தை பொறுத்து மோசடியாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என்ன மோசடி செய்தார் என்றால் செல்வம் இறந்துவிட்டதால் அவரது சொத்தை பொறுத்து மோசடியாக உயில் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. செல்வத்திற்கு சொந்தமான சொத்தை பொறுத்து அவர் இறந்த பிறகு அவருடைய வாரிசான அலமேலு அம்மாள் 1ம் பிரதிவாதி பிரகாஷ் எழுதி வைத்த உயில் ஆவணத்தின்படி பிரகாஷ் அவரது பெயருக்கு பட்டா மாற்றி அனுபவித்து வருவதை தான் மோசடி செய்ததாக கூறியுள்ளேன்.

5) உயில் ஆவணம் ஏற்பட்ட விவரம் அலமேலு அம்மாள் இறந்து 20 நாட்கள் கழித்து தான் எனக்கு தெரியும். வேறு எந்த வகையிலும் 1ம் பிரதிவாதி மோசடி செய்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். உயில் ஆவணம் பதிவு செய்த விவரங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி ஆவணங்கள் ஏற்படுத்திக்கொண்ட விவரம் குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது

என்றால் சரிதான். வாதிக்கு ஆதரவாக உண்மை விவரங்களை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.02.03 15:46:51 +0530

District Munsif

Mannargudi.